[*1995 ஏப்ரல் 26*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 876 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள். இறப்பு ஒன்றும் இல்லை. இந்த மாதிரி நோய் வருகிறபோது அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே உடனடியாக தனியாக அதற்கென்று ஒரு இடத்தை ஒதுக்கி அவர்களுக்கு சிகிச்சை கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலேயும் மருத்துவர்கள் சென்று தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அதோடு, அந்தப் பகுதியிலே சுத்தம் செய்வது, குடிநீரைச் சுத்தப்படுத்திக் கொடுப்பது, இப்படிப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. அதோடு சுகாதாரமாக இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், பொதுமக்கள் என்னென்ன நடவடிக்கைகளைக் கையாளவேண்டும் என்ற அறிவுரையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. எனவே, அந்தந்த இடங்களிலே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக சென்னையிலே ஒரு மருத்துவமனை தனியாக இயங்கி வந்தாலும், மற்ற இடங்களிலே இருக்கிற மருத்துவமனைகளிலே தேவையான நேரத்திலே தேவையான படுக்கைகள் ஒதுக்கப்படுகிறது. இப்போது காலரா நோயைப்பற்றித்தான் நான் சொன்னேன். ஆனால், வயிற்றுப் போக்கால் பாதிக்கப்படக்கூடியவர்களும் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் சேர்த்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 444, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

444--

மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுதல்.

**33406--திருமதி ப. சரஸ்வதி :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூர் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

1995 ஏப்ரல் 26]

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையமானது, அரசு மருத்துவமனையாக இருந்து ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்ட ஒன்று. மோகனூரில் சர்க்கரை ஆலை இருக்கின்றது; தொழிற் பயிற்சிக் கல்லூரி இருக்கின்றது; சுப்பிரமணியர் தமிழ்க் கல்லூரி இருக்கின்றது. அது காவிரி ஆறு பாய்ந்து வருகின்ற இடம். அங்கே வேலை வாய்ப்பு இருப்பதால், கூலித் தொழிலாளர்கள் அதிகமாக வந்து தங்க ஆரம்பித்து விட்டனர். மக்கள் தொகை பெருகி வந்ததற்குப் பின்னரும், பேரூராட்சி நகராட்சியாகக் கூடிய அளவிற்கு வளர்ந்ததற்குப் பின்னரும் இன்று வரை அது ஆரம்ப சுகாதார நிலையமாகவே இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் கருணைகூர்ந்து அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற மோகனூர் பேரூராட்சி பகுதியில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று ஒரு வழிமுறையை ஏற்படுத்தி, நாடு முழுவதும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. மற்ற மாநிலத்தைவிட தமிழகத்திலே தான் மிகச் சிறப்பாக அது அமலாக்கப்பட்டு இருக்கிறது. நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே வருகிறபோது சில இடங்களிலே இருக்கின்ற 'Non-Taluk Hospitals' தாலுகா அல்லாத மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டும் என்று ஒரு கொள்கை ரீதியான முடிவை அரசாங்கம் நீண்ட நாட்களுக்கு முன்பே எடுத்து, அது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அதிலே பொதுமக்களிடத்திலே எதிர்ப்பு ஏற்பட்டது என்பதை உணர்ந்து, நம்முடைய அரசு வந்த பின்னாலே, அது ஆரம்ப சுகாதார நிலையமாக—மத்திய அரசினுடைய அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக மாற்றப்பட்டாலும், ஏற்கெனவே அந்த மருத்துவமனையிலே என்னென்ன பணிகள் நடைபெற்றனவோ, அத்தனை பணிகளும் குறைவில்லாமல் நடத்தப்பட வேண்டும்; குறிப்பாக பிரேத பரிசோதனை செய்துகொண்டு இருந்தால், அது தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்; ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொல்லி, அதை விட்டுவிடக்கூடாது என்று சொல்லி இந்த உத்தரவையும்

சேர்த்துத்தான் நாம் கொடுத்து இருக்கிறோம். அதற்குப் பின்பும்கூட, பொதுமக்களுக்கு இது சரியாகத் தெரிவிக்கப்படாத காரணத்தினாலோ அல்லது தவறாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிற காரணத்தினாலோ மீண்டும் பொதுமக்களிடத்தில் ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அரசாங்கம் இதைத் தீரப் பரிசீலித்து, ஏற்கெனவே இருந்த வகையிலே வைக்க முடியுமா என்பதைப்பற்றி ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே இதிலே முடிவு எடுக்கும்.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே பதிலைதான் கூறினார்கள். ஆனால் அங்கே அதிகமான படுக்கை வசதியும் மருத்துவ வசதியும் செய்து கொடுப்பதாகக் கூறினார்கள். இன்று வரை அங்கே மருத்துவர்களும் அதிகமாக நியமிக்கப்படவில்லை; நர்ஸ்களும் போடப்படவில்லை; போதிய எக்குப்மென்ட்ஸ் அங்கே எதுவுமே இல்லாத காரணத்தால் இதுவரை 4, 5 பேர் ஹார்ட் அட்டாக் வந்து மருத்துவமனைக்கு சென்று அங்கு முதல் உதவி கொடுத்து, நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு வருவதற்குள் உயிர் பிரிந்துவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலான படுக்கை வசதியும் செய்து, மருத்துவர்களையும் அங்கே உடனடியாக நியமித்து, ஹார்ட் அட்டாக் வருபவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்க அங்கே தேவையான எக்குப்மென்ட்ஸ் நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் மாற்றி மாற்றிப் பேசக்கூடியவர்கள் அல்ல. எனவேதான் நான் அதை மீண்டும் திருப்பிச் சொல்லி இருக்கிறேன். அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம். எனவே, அந்த நிலையத்திற்கு என்னென்ன வசதிகளைச் செய்ய முடியுமோ அதைத்தான் செய்ய முடியும். எனவே, படுக்கைகளை அதிகப்படுத்துவது என்பதோ, மருத்துவர்களை அதிகப்படுத்துவது என்பதோ சிரமமான காரியம். ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவர்கள் இருப்பார்கள். எனவே, அதைத்தான் செய்ய முடியும். எனவே, அந்த வகையிலே இப்போது இருப்பது, அரசாங்கம் என்ன செய்ய முடியுமோ அந்த அளவிற்கு செய்து இருக்கிறது. அதேபோல மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்று நாம் நினைக்கிறபோது ஒரு தாலுகாவுக்கு ஒரு மருத்துவமனை என்று நாம் வைத்து இருக்கிறோம். அந்த நார்ம்ஸ்படி இப்போது

1995 ஏப்ரல் 26]

தமிழகத்திலே முழுமையாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தாலுக்கா அல்லாத இடங்களிலே ஒரே தாலுக்காவிலே இரண்டு மருத்துவ மனைகள் வைப்பது என்பதுதான் இப்போது முடியாத காரியமாக இருக்கிறது. எனவே தான் அந்த பதிலை நான் சொன்னேன். இருந்தாலும் அதைப் பற்றி அரசாங்கம் நான் ஏற்கனவே தெரிவித்தபடி ஆய்வு செய்யும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *445*, திரு. ஆ. செல்ல துரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

445—

உடன்குடி-சென்னைக்கு பேருந்து இயக்குதல்

34345*—திரு. ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடன்குடியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கர்களையும் அரசியல் எத்தர்களையும் தர்மத்தின் வாள் கொண்டு பகை முடித்து வருகின்ற எங்கள் அம்மா புரட்சித் தலைவி புனிதத் தாயினுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி என் கேள்வியை தொடுக்க நான் முன் வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவி ஒரு ஆணை இடுவார்களேயானால் ஒரு மாதத்தில் முடிக்கின்ற அந்த ஆணையை ஒரே நாளில் முடிக்கின்ற ஆற்றலைப் படைத்த அமைச்சர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அமைச்சரிடம் நான்கு ஆண்டுகளாக நான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS